ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2340/50 – 2023 ජූලි මස 14 වැනි සිකුරාදා – 2023.07.14

**2340/50 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2023 ஆம் ஆண்டின் 121 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/ 11/ 2022/ CEB/137 .
பிர. செய. குறி. இல.: DS/MN/LB/05/AQ/WPP/ Phl.Ext/ 24.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, மே 17.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், மன்னார் நகரம்.

2. **காணியின் விபரம்** : வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் இல. MN/73, சவுத்பார் கிராம அலுவலர் பிரிவில் சவுத்பார் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.03.10 ஆந் திகதி MN/MNN/2023/3 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

01. **துண்டு ‘A’ - சவுத்பார்காணி - விஸ்தீரணம்: 1.7287 ஹெக்டயார்**

வடக்கு : ஆயர் இல்லம், மன்னார் உரிமை கோரும் சவுத்பார் காணி மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) சவுத்பார்காணி மற்றும் களப்பு ; கிழக்கு: களப்பு மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) சவுத்பார்காணி ; தெற்கு: (உரிமை கோருவோர் தெரியாத) சவுத்பார்காணி மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி திணைக்களம்) ; மேற்கு : வீதி (வீதி அபிவிருத்தி திணைக்களம்), ஆயர் இல்லம், மன்னார் உரிமை கோரும் சவுத்பார்காணி மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) சவுத்பார்காணி.

EOG 07 - 0104


1A – G 39888 – 14 (2023/07)



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

***2023 ஆம் ஆண்டின் 122 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல.: 4-3/ 11/ 2022/ CEB/147 .
பிர. செய. குறி. இல.: DS/MN/LB/05/AQ/WPP/ Phl.Ext/ 13.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, மே 17.

**அட்டவணை**

**1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், மன்னார் நகரம்.

**2. காணியின் விபரம்** : வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் இல. MN/60, ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவில், ஓலைத்தொடுவாய் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.03.09 ஆந் திகதி MN/MNN/2022/321 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள் மற்றும் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு 'A' - மாலயன்வடி - விஸ்தீரணம்: 3.6207 ஹெக்டயார்**

வடக்கு : (உரிமை கோருவோர் தெரியாத) ஓலைத்தொடுவாய் காணி ; கிழக்கு: (உரிமை கோருவோர் தெரியாத) ஓலைத்தொடுவாய் காணி மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி திணைக்களம்) ; தெற்கு: வீதி (வீதி அபிவிருத்தி திணைக்களம்), (ஏ. என். எம். எம். அஜ்வத்தினால் உரிமை கோரப்படும்) கிழவன்வாடி தென்னந்தோட்டம் மற்றும் துண்டு B ; மேற்கு : துண்டு B (ஏ. என். எம். எம். அஜ்வத்தினால் உரிமை கோரப்படும்) கிழவன்வாடி தென்னந்தோட்டம் மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) ஓலைத்தொடுவாய் காணி.

**02. துண்டு 'B' - கிழவன்வாடி தென்னந்தோட்டம் - விஸ்தீரணம்: 0.2438 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு A ; கிழக்கு: துண்டு A மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி திணைக்களம்) ; தெற்கு: வீதி (வீதி அபிவிருத்தி திணைக்களம்) மற்றும் (ஏ. என். எம். எம். அஜ்வத்தினால் உரிமை கோரப்படும்) கிழவன்வாடி தென்னந்தோட்டம் ; மேற்கு : (ஏ. என். எம். எம். அஜ்வத்தினால் உரிமை கோரப்படும்) கிழவன்வாடி தென்னந்தோட்டம் மற்றும் துண்டு A.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.